**மாகாண வீதி அபிவிருத்திச் செயற்திட்டம் (மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்கள்) - 2015**

---

மாகாண வீதி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் (மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்கள்) 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 மார்ச் 26 ஆம் திகதிய எஸ்எல்-பி 96 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையின் 4 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

மாகாண வீதி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் (மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்கள்) கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகள் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. மாகாண வீதிகளை புனரமைத்து தரமுயர்த்துவதன் மூலம் விசேடமாக கிராமப்புறப் பகுதிகளிலுள்ள மக்களிற்காக வீதிகள் வலையமைப்பின் இணைப்பு மற்றும் நம்பகத்தன்மையை அதிகரித்தல் மற்றும் வீதி முகவர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களின் நிறுவனரீதியான இயலுமையை வலுப்படுத்துதல் அதன் மூலம் உள்ளூர் பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிராந்திய வேற்றுமைகளினைக் குறைத்தல் என்பவற்றிற்கு பங்களிப்புச் செய்தல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாக உள்ளன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 14,187 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் யென் 11,171 மில்லியனானதுடன் அதில் ரூபா 11,628 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் யென் 9,156 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 செப்தெம்பர் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2014 சனவரி அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. பின்னர், செயற்திட்ட காலப்பகுதி 2015 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

1.3 **நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.4 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது

அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (யென்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்ததா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(எ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஐ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஓ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (யென்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1. கணக்கட்டுக் குறைபாடு

செயற்திட்ட ஏடுகளின் பிரகாரம், ரூபா 263,978 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 45 தளபாட மற்றும் அலுவலக உபகரணப் பொருட்கள் மீளாய்வாண்டின் போது ஏலம் மூலம் அகற்றப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், உரிய சொத்துக்களின் கிரயம் ரூபா 182,235 ஆக காட்டப்பட்டிருந்தது. மேலும், அவற்றின் மீதான விற்பனை பெறுகைகள் ரூபா 14,150 மத்திய மாகாண பிரதம செயலாளரின் கணக்குகளின் வருமானமாகக் கருதப்பட்டிருந்தது.

### 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2015 ஆம் ஆண்டின் போது | | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜெஐசீஏ | 9,156.00 | 11,628.00 | 2,420.51 | 1,727.19 | 2,200.29 | 9,143.65 | 11,943.46 |
| இலங்கை அரசாங்கம் | 2,015.00 | 2,559.00 | 543.92 | 412.93 | 484.32 | 1,353.99 | 1,620.31 |
| **மொத்தம்** | **11,171.00** | **14,187.00** | **2,964.43** | **2,140.12** | **2,684.61** | **10,497.64** | **13,563.77** |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மத்திய மாகாணத்திலுள்ள 15 மாகாண வீதிகளின் 168.5 கிலோமீற்றர்கள் மற்றும் சப்ரகமுவ மாகாணத்திலுள்ள 18 மாகாண வீதிகளின் 181 கிலோமீற்றர்கள் என்பவற்றை புனரமைத்து தரமுயர்த்துவதற்காக 03 கட்டங்களின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. செயற்திட்ட பூர்த்தியாக்கல் அறிக்கையின் பிரகாரம், மத்திய மாகாணத்திலுள்ள 15 மாகாண வீதிகளின் 163.55 கிலோமீற்றர்கள் மற்றும் சப்ரகமுவ மாகாணத்திலுள்ள 17 மாகாண வீதிகளின் 137.53 கிலோமீற்றர்கள் என்பவற்றின் புனரமைப்பு வேலைகளுக்காக வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் செயற்திட்டக் காலப்பகுதியின் போது கணிசமானளவு பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் சப்ரகமுவ மாகாணத்திலுள்ள வீதிப் புனரமைப்பு வேலைகளின் நோக்கெல்லை ஒப்பந்தகாரர்களின் தொடர்ச்சியான தவறுகள் மற்றும் விலை அதிகரிப்புக்கள் போன்ற காரணங்களால் குறைக்கப்பட்டிருந்தது. எனினும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் பல மாகாண வீதிகளின் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் விளைவால் வேலைகளின் நோக்கெல்லை குறைக்கப்பட்டிருந்தது என செயற்திட்டப் பணிப்பாளர் விளக்கமளித்திருந்தார்.

(ஆ) மேற்குறிப்பிடப்பட்டவாறு, செயற்திட்ட பூர்த்தியாக்கல் அறிக்கையின் பிரகாரம் செயற்திட்டக் காலப்பகுதியின் இறுதியிலுள்ளவாறு மாகாண வீதிகளின் புனரமைப்பானது ஏறக்குறைய பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. எனினும், வெவ்வேறு காரணங்களினால் செயற்திட்டக் காலப்பகுதியின் இறுதியிலுள்ளவாறு பல புனரமைப்பு வேலைகள் பூர்த்திசெய்யப்படாது இருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழ்வருமாறு விபரிக்கப்படுகின்றன.

(i) ரூபா 199.26 மில்லியன் மற்றும் ரூபா 330 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்தின் கட்டம் - 02 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட மத்திய மாகாணத்திலுள்ள முறையே அம்பிற்றிய – உடுவெல வீதியின் 05

கிலோமீற்றர்கள் மற்றும் நில்தன்னஹின்ன – வட்டுமுல்ல வீதியின் 6.76 கிலோமீற்றர்கள் என்பவற்றின் புனரமைப்பு வேலைகள் வீதிகளின் பல பிரிவுகளின் நழுவல்கள் காரணமாக பின்னர் கைவிடப்பட்டிருந்தன. புதிய அளவீட்டுப் பட்டியல்கள் போன்றவற்றினை மீள வடிவமைத்தல் மற்றும் தயாரித்தலிற்காக 2015 ஆகஸ்ட் இல் ரூபா 1.72 மில்லியன் கிரயத்தில் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பிடமிருந்து மதியுரை சேவைகள் பெறப்பட்டிருந்ததுடன் ரூபா 50.28 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் அவற்றுக்காக ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. எனினும், செயற்திட்டக் காலப்பகுதியின் இறுதி வரையிலும் அம்பிற்றிய – உடுவெல வீதியின் 2+512 கிலோமீற்றர் தொடக்கம் 2+530 கிலோமீற்றர் வரையான இணைப்பு மற்றும் நில்தன்னஹின்ன – வட்டுமுல்ல வீதியின் 18+215 கிலோமீற்றர் தொடக்கம் 18+265 கிலோமீற்றர் வரையான மற்றும் 23+460 கிலோமீற்றர் தொடக்கம் 23+560 கிலோமீற்றர் வரையான இணைப்புக்களிலுள்ள முன்னேற்றங்கள் மீது தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட முன்மொழிவுகளை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ரூபா 255 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் சப்ரகமுவ மாகாணத்தில் மாவெல – வெலங்க – றுகத்தான வீதியின் புனரமைப்பு வேலைகள் மீது வழங்கப்பட்ட ஒப்பந்தம் ரூபா 130 மில்லியன் பெறுமதியிடப்பட்ட வேலைகளின் பூர்த்தியாக்கலின் பின்னர் 2015 ஏப்ரல் மாதத்தில் மெதுவான செயன்முன்னேற்றம் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தகாரரால் மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீட்டினால் அதே ஒப்பந்தகாரரிற்கு மீளவழங்கப்பட்டிருந்தது. எனினும், ஒப்பந்தகாரரின் தவறுகள் காரணமாக ஒப்பந்தம் மீண்டும் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் 2015 செப்தெம்பர் மாதத்தில் ரூபா 115 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் வேறு நபரிற்கு வழங்கப்பட்டிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆரம்ப மதிப்பிடப்பட்ட கிரயங்களை வீதிப் புனரமைப்பு வேலைகள் மீது செலவிடப்பட்ட உள்ளபடியான கிரயங்களுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. முறையான நிலக்கீழ் அளவைகளை அடிப்படையாகக் கொண்டு உரிய வேலைகளின் அளவீட்டுப் பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என சுட்டிக்காட்டியது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| விபரம் | பொதிகளின் எண்ணிக்கை | மதிப்பிடப்பட்ட கிரயம் | உள்ளபடியான கிரயம் | (மேலதிக கிரயங்கள்)/ சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| **மத்திய மாகாணம்** | | | | |
| கட்டம் - I | 06 | 2,040.0 | 2,050.4 | (10.5) |
| கட்டம் - II - I | 06 | 1,170.0 | 1,152.4 | 17.7 |
| கட்டம் - II - II | 10 | 2,298.6 | 2,379.2 | (80.6) |
| கட்டம் - III | 03 | 59.0 | 56.4 | 2.6 |
| சமூக அடிப்படையிலான அமைப்புக்களால் புனரமைக்கப்பட்ட வீதி | 15 | 3.0 | 28.8 | (25.8) |
| | | **5,570.6** | **5,667.2** | **(96.6)** |

| | | | | |
|---|---|---|---|---|
| **சப்ரகமுவ மாகாணம்** | | | | |
| கட்டம் - I | 05 | 1,624.4 | 1,567.6 | 56.9 |
| கட்டம் - II - I | 05 | 1,700.6 | 1,542.8 | 157.8 |
| கட்டம் - II - II | 06 | 1,824.3 | 1,598.9 | 225.4 |
| கட்டம் - III | 01 | 255.1 | 130.1 | 125.0 |
| மிகுதி வேலை | | 115.5 | 88.4 | 27.0 |
| சமூக அடிப்படையிலான அமைப்புக்களால் புனரமைக்கப்பட்ட வீதி | 10 | 2.0 | 16.4 | (14.4) |
| | | ---------- | ---------- | --------- |
| | | **5,521.9** | **4,944.2** | **577.7** |
| | | ====== | ====== | ===== |

(ஆ) வழமையாக, உரிய ஒப்பந்தகாரர்களினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுதல்கள் மீது மூலப்பொருள் வழங்குனர்களிற்கு செயற்திட்டம் முற்பணங்களை நேரடியாக செலுத்தியிருந்ததுடன் பிரதான ஒப்பந்தகாரர்களுக்கு மிகையான நிதி மிகைகளை வழங்கியிருந்தது. மத்திய மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட 03 வீதிப் புனரமைப்பு வேலைகளின் மீது ஒப்பந்தகாரர்களுக்கு மீளாய்வாண்டின் போது மூலப்பொருள் வழங்குநர்களிற்கு ரூபா 2 மில்லியன் கூட்டுத்தொகையான முற்பணங்கள் விடுவிக்கப்பட்டிருந்தமை தெரிவுச் செவ்வையின் போது வெளிப்பட்டிருந்தது.

(இ) ஒப்பந்தகாரர்களினால் செய்யப்பட்ட வேலைகள் மீது மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளை தீர்வுசெய்வதில் ஏற்பட்ட காலதாமதங்கள் மீதான 03 பொதிகளின் கீழ் வீதிப் புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்ட ஒப்பந்தகாரர்களிற்கு ரூபா 3.31 மில்லியன் கூட்டுத்தொகையான வட்டிக் கட்டணங்கள் செயற்திட்டத்தால் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2015 திசெம்பர் 18 ஆம் திகதி கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட வேலைத்தள விஜயத்தின் போது புனரமைக்கப்பட்டு 2014 யூலை 21 ஆம் திகதி மாகாண அதிகாரசபைகளிற்கு கையளிக்கப்பட்ட சப்ரகமுவ மாகாணத்தின் உதுவான்கட – உஸ்ஸப்பிற்றிய வீதி தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் 22 இடங்களில் சேதமாக்கப்பட்டிருந்ததுடன் வீதியினை மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. உரிய நிறுவனங்களினால் ஒருங்கிணைப்பு நோக்கங்களிற்காக முறையான நடைமுறைகள் பேணப்பட்டிருந்தால் அத்தகைய சந்தர்ப்பங்களை தவிர்த்திருக்கலாம் என அவதானிக்கப்பட்டது.

(உ) இயந்திரரீதியில் தொழிற்படும் தார் தெளிக்கும் பவுசரொன்றை கொள்வனவு செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 12 மில்லியன் தொகையான ஒதுக்கீடு உரிய நோக்கங்கத்திற்காக திறமையுடைய விநியோகஸ்தரை தெரிவு செய்யத் தவறியமை காரணமாக பயன்படுத்தப்படாதிருந்தது.

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையான விடயம்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மத்திய மாகாணத்தின் பிரதம செயலாளர் அலுவலகத்தில் ரூபா 29.98 மில்லியன் தொகையொன்று மத்திய மாகாணத்தின் வீதிப் புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்ட 03 ஒப்பந்தகாரர்களால் மேற்கொள்ளப்பட்ட பிணக்குத்தீர்த்தல் கோரிக்கைகள் மீதான சாத்தியமான பொறுப்புக்களை எதிர்கொள்வதற்காக நிறுத்திவைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.5 குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

2014 ஜனவரி 14 ஆம் திகதி மத்திய மாகாண சபையின் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காக செயற்திட்டத்தால் ரூபா 29.82 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட அஸ்பால்ற் பிறிமிக்ஸ் பேவிங் இயந்திரமொன்று 2015 திசெம்பர் 31 வரை 05 சந்தர்ப்பங்களில் மாத்திரம் வீதி வேலைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தமை வெளிப்பட்டிருந்தது.

**3.6 செயற்திட்ட நடவடிக்கைகளை முடிவுறுத்தல்**

செயற்திட்ட நடவடிக்கைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் அனைத்து தகுதியான செலவுகளும் கோரப்பட்டும் மீளப்பெறப்பட்டுமிருந்தன. மேலும், இலங்கை மத்திய வங்கியிலுள்ள விசேட (யென்) கணக்கில் இருந்த ரூபா 9.51 மில்லியன் செலவிடப்படாத மீதி 2016 பெப்ரவரி 08 ஆம் திகதி மீளளிக்கப்பட்டிருந்த போதிலும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு கையளிக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 753(1) இன் பிரகாரம் பேணப்பட வேண்டுமென வேண்டப்பட்ட கையளிப்பு ஏடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், செயற்திட்ட முடிவுறுத்தல் கணக்குகளை தயாரித்து சமர்ப்பிப்பதற்கு செயற்திட்ட நிறைவேற்றல் முகவரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.